**கவனிக்க.**- 2006.04.12 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (IIஅ) மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1442 - 2006 අප්‍රේල් 21 වැනි සිකුරාදා - 2006.04.21

*1442 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 348 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 351 |

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2006, ஏப்பிறல் 28 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2006, ஏப்பிறல் 12 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2006 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக் குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரசகரும மொழித்தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்கு விதிகள், தாபனக் கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்:**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும்:-

3 : 1 : 1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்தி வைக்கலாம்.

3 : 1 : 2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3 : 1 : 4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடை நிறுத்தப்படும். அந்த இடை நிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 3:1:6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3 : 1 : 5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3 : 1 : 6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3 : 1 : 7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3 : 1 : 8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்த்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமரத்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவு தொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவு தொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்தி நிதியத்துக்குத் தனது உதவு தொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளன் கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்த போதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின் கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவயாற்றிவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப்பரீட்சார்த்திகளும்கீழ்வரும்விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர்;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர்;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலி சாரிடம பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகாரசபையால் பரிசீலனை செய்வதற்குற்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்தி களுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும் போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தி யோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் .

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப் பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப் படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்ட தாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள் களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்தி லேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம், முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக்கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை , மாட்டுத்தாள், முதலிய வற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக்கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த் தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.



13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப் பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப்பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்.**

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப்பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப் படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்று பத்திரங்கள் உம்மிட மிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங் களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டு வரமறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனிரேகைத் தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வை யாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றை யும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக்கருவிகள், பென்சில். அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப்பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப் பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளின் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல் மூலையிலன்று) உமக்கு கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## புத்தச் சிராவக்க பிக்கு பல்கலைக்கழகம்-அனுராதபுரம்

*மஹோபாத்தியாய பதவி*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட 1996 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு அனுராத புரத்தில் இயங்கிவருகின்ற புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகத்தின் "மஹோபாத்தியாய" பதவிக்காக விண்ணப்பங்கள் பொருத்தமானவர் களிடம் இருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பதாரி அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பௌத்த கல்வியில் பட்டப்பின் படிப்பினை பூர்த்தி செய்தவராகவும், உபசம்பதா பெற்றவின் 20 வருடங்கள் பூர்த்தியானவராகவும், தொடர்பு மொழிகளில் பாண்டித்தியம் உடையவராகவும் அத்துடன் தர்மத்தையும் ஒழுக்கவிதிகளையும் கடைபிடிக்கும் பிக்குவராகவும் இருத்தல் வேண்டும்.

இந்த பல்கலைக்கழகம் அனுராதபுர புனித நகரத்தில் அமைக்கப் பட்டுள்ளது, மஹோபாத்தியாயர் 03 வருட காலத்திற்கு பதவி பெறுவார். அவர் பல்கலைக்கழகத்தில் முழு நேர அதிகாரியாகவும், முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும், முதன்மை கல்விசார் அதிகாரியாகவும் இருப்பதுடன் பல்கலைக்கழகத்தில் ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் கல்வி, நிர்வாக விடயங்கள் தொடர்பாக நிர்வாக சபையினாலும் ஆலோசனை சபையினாலும் எடுக்கப்படும் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குத் தனியான பொறுப்புடையவராகவும் இருப்பார்.

மஹோபாத்தியாயர் மாதாந்த சம்பளத்தையும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளையும் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுடையவராவர். குறிப்பிட்ட விண்ணப்பதாரி பிக்குமார் 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதியன்று 62 வயதிற்கு மேற்படாதவராக இருக்க வேண்டும். பல்கலைக்கழக முறை, அரச சேவை, கூட்டுத் தாபனம் அல்லது நியதிச்சட்ட சபைகளில் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் குறிப்பிட்ட நிறுவனத் தலைவருக் கூடாக குறிப்பிட்ட விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்படும் சந்தர்ப்பத்தில் விடுவிக்கப்படுவார் என வெளிபடுத்தக்கூடிய வகையில் நிறுவனத் தலைவரின் சம்மதக் கடிதத்துடன் அனுப்புதல் வேண்டும். இவ்வசனம் அநுராதபுர புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகத்திலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு தொடர்புடையதல்ல.

மஹோபாத்தியாய பதவிக்கு விண்ணப்பதாரிகள் தனது சுய விபரங்களும் பட்ட விஷய சம்பந்தமான விபரங்களும் அடங்கிய விண்ணப்பங்களை 2006 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ "பதிவாளர் அல்லது செயலாளர், புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழக ஆலோசனைச்சபை, நந்தன மாவத்தை, அனுராதபுரம்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "மஹோபாத்தியாய பதவி" எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

பதிவாளர்/செயலாளர்,
ஆலோசனைச் சபை.

புத்த சிராவக்க பிக்கு பல்கலைக்கழகம்,
நந்தன மாவத்தை,
அனுராதபுரம்.
2006.04.04

4-301

## இலங்கைத் தரைப்படை

*பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்*

*பாதுகாப்பு பட்டதாரி பட்டத்துடன் அதிகாரவாணையிலும் நியமிக்கப்படுதல்*

இலங்கைத் தரைப்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர் பதவி களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் இலங்கையில் பயிற்றப்படுவர்.

2. பயிற்சிக் காலவரையை திருப்திகரமாக பூர்த்திசெய்ததன் பின்னர் பயிலிளவல் உத்தியோகத்தர்கள் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் பட்டப்படிப்புடன் இரண்டாம் லெப்டினன்ட் பதவி வரிசையில் அதிகாரவாணையில் நியமிக்கப்படுவர்.

3. **தகுதி**.- விண்ணப்பதாரிகள்-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2006.05.31 ஆந் திகதியன்று 18 வயதுக்கும் 22 வயதுக்கும் உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) க. பொ. த. (உ.தரப்) பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் 03 பாடங்களில் சித்தி பெற்றும் 135 புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தகுதி பெற்றவர்களாயும், க. பொ. த. (சா. தரப்) பரீட்சையில் இரண்டமர்வுக்கு மேற்படாமல் ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தியும் கணிதப் பாடத்தில் சாதாரண சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் விவாகமாகாதவர்களாய் இருத்தல் வேண்டும்.
பயிற்சிக் காலத்தில் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கு விவாகம் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

(உ) விண்ணப்பதாரிகள் தேவையான மருத்துவ நியமங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். இறுதி நேர்முகப் பரீட்சைக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அந்நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் இலங்கைத் தரைப்படை ஒழுங்குகளின்கீழ் நடாத்தப்படும் மருத்துவ பரிசோதனைக்கு உட்புகுத்தப்படுவர்.

4. **சேவை நிபந்தனைகள்**.- (அ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிலிளவல் அதிகாரிகளாக சேர்த்துக்கொள்ளப் படுவதுடன் நிரந்தர சேவையில் 10 வருடங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படுவர்.

(ஆ) பயிற்சிக் காலத்தில் பயிலிளவல் அதிகாரி ஒருவரின் வருடாந்த சம்பளம் ரூபா 1,15,320 ஆகும். பயிலிளவல் அதிகாரியாக சேவை செய்யும் காலவரையில் அவருக்கு எவ்விதமான சம்பள உயர்வுகளுக்கும் வாய்ப்பு இல்லை.

(இ) தரைப்படைத் தளபதியினால் நிர்ணயிக்கப்பட்டவாறான ஒரு பயிற்சி நெறியை பயிலிளவல் அதிகாரிகள் பின்பற்ற வேண்டும். பயிற்சிக் காலம் 30 மாதங்கள் வரையிலாகும்.

(ஈ) பயிற்சிக் காலத்தில் பயிலிளவல் அலுவலர்களின் தரம் பிற வரிசைப் பதவியினரது தரத்துக்கு சமமானதாகவும் அவர்கள் தரைப்படை சட்டங்களுக்கு உட்படுத்தப்பட்டவர் களாயும் இருத்தல் வேண்டும்.

(உ) (1) பயிற்சிக் காலத்தில் பயிலிளவல் அதிகாரியொருவர் தம் விருப்பத்தின் பேரில் ஆணைபெறும் அபேட்சகர் நிலையிலிருந்தும் விலகினால் அப்பயிலிளவல் அதிகாரிக்கு பயிற்சிக் காலத்தில் செலவிடப்பட்ட எல்லாவித செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இலங்கை அரசாங்கத்துக்கு மீளச் செலுத்தல் வேண்டும்.

(2) பயிலிளவல் அதிகாரியொருவர் பயிற்சி நெறியில் ஈடுபட்டிருக்கும் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத் திலும் துர்நடத்தை காரணமாகவோ அல்லது தமது கட்டுப்பாட்டுக்குட்பட்ட காரணங்களினாலோ ஆணை பெறுவதற்கு தகுதியற்றவர் என உயர் அதிகாரி களினால் சிபாரிசு செய்யப்பட்டால் அவ்வுத்தி யோகத்தர் பேரில் ஏற்பட்ட எல்லாச் செலவுகளையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இலங்கை அரசாங்கத்துக்கு மீளச் செலுத்தல் வேண்டும்.

(ஊ) ஆணைபெறும் உத்தியோகத்தர்களாக நியமனம் பெறும்போது பயிலிளவல் உத்தியோகத்தராக நிரந்தரப் படையில் உட்புகுத்தப்பட்ட கட்டுப்பாடுகளிலிருந்தும் அவர் விடுவிக்கப்படுவார்.

(எ) உத்தியோகத்தர்களாக ஆணைபெற்ற பின்னர் ஆகக் குறைந்தது 10 வருடங்களாவது தரைப்படையில் சேவை செய்ய வேண்டும்.

(ஏ) இலங்கைத் தரைப்படையில் இரண்டாவது லெப்டினன்ட் என்ற ஆரம்ப பதவி வரிசையில் ஆணைபெறும் உத்தியோகத்தராக நியமிக்கப்படும்போது அவர்களுக்கு இலங்கைத் தரைப்படையின் உத்தியோகத்தர்களுக்கான ஏற்புடைய பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவர் :-

*இரண்டாவது லெப்டினன்ட் :* ரூபா 1,24,680 ஆண்டு ஒன்றுக்கு.
ரூபா 10,390 மாதம் ஒன்றுக்கு.

*லெப்டினன்ட் :* ரூபா 1,57,500 - 9 X 3,780 - ரூபா 1,91,520 ஆண்டு ஒன்றுக்கு.
ரூபா 13,125 - 9 X 315 - ரூபா 15,960 மாதம் ஒன்றுக்கு.

*கப்ரின் :* ரூபா 1,80,180-9 X 3,780 - ரூபா 2,14,200 ஆண்டு ஒன்றுக்கு.
ரூபா 15,015 - 9 X 315 - ரூபா 17,850 மாதம் ஒன்றுக்கு.

*மேஜர் :* ரூபா 2,02,860 - 7 X 3,780 - 1 X 4,200 - 2 X 6,300 - ரூபா 2,46,120 ஆண்டு ஒன்றுக்கு.
ரூபா 16,905 - 7 X 315 - 1 X 350 - 2 X 525 - ரூபா 20,510 மாதம் ஒன்றுக்கு.

*லெப்டினன்ட் கர்னல் :* ரூபா 2,14,980 - 2 X 7,740 - 5 X 8,580 - ரூபா 2,73,360 ஆண்டு ஒன்றுக்கு.
ரூபா 17,915 - 2 X 645 - 5 X 715 - ரூபா 22,780 மாதம் ஒன்றுக்கு.

*கர்னல் :* ரூபா 2,76,540 - 7 X 11,880 - ரூபா 3,59,700 ஆண்டு ஒன்றுக்கு.
ரூபா 23,045 - 7 X 990 - 29,975 மாதம் ஒன்றுக்கு.

*பிரிகேடியர் :* ரூபா 3,00,300 - 8 X 11,880 - ரூபா 3,95,340 ஆண்டு ஒன்றுக்கு.
ரூபா 25,025 - 8 X 990 - 32,945 மாதம் ஒன்றுக்கு.

*மேஜர் ஜெனரல் :* ரூபா 3,45,600 - 6 X 12,360 - ரூபா 4,19,760 ஆண்டு ஒன்றுக்கு.
ரூபா 28,800 - 6 X 1,030 - 34,980 மாதம் ஒன்றுக்கு.

*லெப்டினன்ட் ஜெனரல் :* ரூபா 3,70,320 - 5 X 12,360 - ரூபா 4,32,120 ஆண்டு ஒன்றுக்கு.
ரூபா 30,860 - 5 X 1,030 - ரூபா 36,010 மாதம் ஒன்றுக்கு.

(ஐ) சம்பள வாய்ப்பு சேவை நிபந்தனை சம்பந்தமாக பின்வரும் ஒழுங்கு விதிகள் உத்தியோகத்தர்களுக்கு நடைமுறைப்படுத்தப் படும் :-

(1) தரைப்படை சம்பளத் தொகுப்பு

(2) 1993, ஒகத்து மாதம் 17 ஆந் திகதிய இலக்கம் 780/7 உடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளி யிடப்பட்ட காலத்துக்கு காலம் திருத்தப்பட்டவாறான 1992 ஆம் ஆண்டின் உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்கு விதிகள்

(3) 1981 ஆம் ஆண்டின் தரைப்படை ஓய்வூதிய பணிக்கொடை கோவை

5. கீழ் 6 ஆம் பந்தியில் குறிப்பிட்டபடி பெற்றோர் அல்லது பாதுகாவலர் பிரகடனப்பத்திரம் ஒன்றுக்கு கையொப்பமிடுவதுடன் அவற்றை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரியின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் அவ்விண்ணப்பதாரர் நியமனம் பெறுவதற்கு முன்னர் பிரகடனப்பத்திரத்தில் அடங்கிய நிபந்தனைகளுக்குட்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுடன் ஒப்பந்த முறி ஒன்றுக்கு கையொப்பமிட வேண்டும்.

6. விண்ணப்பதாரியின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரினால் கையொப்பமிட வேண்டிய பிரகடனம்-

(அ) இலங்கைத் தரைப்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர் விண்ணப்பதாரியான ........................................................ ........................ என்பவரின் தந்தை/ தாய்/ பாதுகாவலர் நானேயாவேன்.

(ஆ) இலங்கையில் பயிற்சி நெறியைப் பின்பற்ற மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் பின்வரும் நிபந்தனைகளை நான் பொறுப்பேற்பேன் :-

(1) பயிற்சிக் காலவரையில் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்படும் எல்லாவிதமான சொந்தச் செலவுகளுக்கும்,

(2) பயிற்சிக் காலத்தில் மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர் தன் சுய விருப்பத்தின் பேரில் ஆணைபெறும் தம் விண்ணப்பதாரர் நிலையிலிருந்தும் விலகினால், அவர் பேரில் செலவிடப்பட்ட எல்லாவிதமான செலவு களையும் இலங்கை அரசாங்கத்துக்கு மீளச் செலுத்துவதற்கும்,

(3) பயிற்சிக் காலத்தில் மேற்பெயர் குறிப்பிட்ட விண்ணப்பதாரர் எச்சந்தர்ப்பத்திலும் (துர்நடத்தை காரணமாகவோ அல்லது தம் கட்டுப்பாட்டுக்குட்பட்ட

காரணங்களால்) ஆணைபெறும் தகுதியற்றவர் என மேல் அதிகாரிகளினால் புகார் செய்யப்பட்டால் இலங்கைக் குடியரசினால் அவருக்காக செலவிடப் பட்ட எல்லாவித செலவுகளையும் மீளச் செலுத்தல் வேண்டும்.

* தேவையற்ற வசனங்களைக் கீறிவிடுக.

.........................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.
பெயர், முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----------------.

.........................................,
திகதி :----. சாட்சியாளரின் கையொப்பம்.

பெயர், முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :----------------.
திகதி :----.

7. **மொழித் தொடர்பான விதிகள்**.- அரசாங்க மொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்கென அரசாங்க மொழி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

8. **அடையாள அட்டை**.- விண்ணப்பதாரர்கள் தங்களை அறிமுகம் செய்வதற்கு தகுந்த அத்தாட்சிப்பத்திரங்களை வைத்திருத்தல் வேண்டும். ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை, தபாற் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது மோட்டார் போக்குவரத்து அதிகாரியினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது கடவுச்சீட்டு இதற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

9. ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்ப தாரர்களின் விண்ணப்பங்கள் தம் திணைக்களத் தலைமை யகத்தினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். இவ்விண்ணப்பக்காரர்கள் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் சேவையிலிருந்தும் விடுவிக்கப் படுவார்கள் என்ற சான்றிதழ் ஒன்றும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.

10. **விண்ணப்பங்கள்**.- விண்ணப்பங்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் போன்று அவர்களின் சொந்த கையெழுத்தில் தயாரிக்கப்பட்டு 2006.05.15 ஆந் திகதி ந. ப. 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் "நிருவாகப் பணிப்பாளர், தரைப்படைத் தலைமையகம், த.பெ. 553, கொழும்பு" என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தரைப்படையில் பயிலிளவல் உத்தியோகத்தர் நியமனங்களுக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும். முடிவுத் திகதிக்கும் நேரத்துக்கும் பின் தரைப்படை தலைமையகத்துக்கு கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது.

11. விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தனுப்புதல் வேண்டும் :-

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பதாரரை நன்கறிந்த பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளினால் வழங்கப்பட்ட குறைந்தபட்சம் இரு குணச்சான்றிதழ்கள். இவற்றில் ஒன்று கடைசியாக கல்வி பயின்ற பாடசாலை அதிபரினால் வழங்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

12. மேற்குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்திசெய்யும் விண்ணப்ப தாரர்களிலிருந்தும் ஆரம்பத் தெரிவு நடைபெறும். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தரைப்படை முனைஞரால் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைகளுக்கு தோற்ற வேண்டியவராவார்கள். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படும் தேர்வுக்குழு முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவிப்பதன் மூலம் இறுதித் தெரிவு நடைபெறும்.

13. தேர்வுச் சபைகளினால் நேர்முகப் பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அத்தகைய நேர்முகப் பரீட்சைகளின் இடம், திகதி என்பன எழுத்துமூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இதுதொடர்பில் ஏற்படும் பிரயாணச் செலவுகளோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படமாட்டாது.

14. அபேட்சகரொருவரை விதந்துரைக்க விரும்பும் எவரும் அவருக்கு நற்சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் அவ்விதம் செய்யலாம். அபேட்சகரொருவரின் தெரிவில் எவ்விதமான ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியிழக்கச் செய்யும்.

15. ஆள் திரட்டலுக்கு தகுதியற்ற விண்ணப்பதாரர்களுக்கு இது சம்பந்தமாக அறிவிக்கப்படமாட்டாது. இவ்விண்ணப்பதாரர் களிடமிருந்து இவை சம்பந்தமான விசாரணைகள் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது.

ஜிஎஸ்சி பொன்சேகா,
ஆர்டப்பி, ஆர்எஸ்பி, ஆர்சிடீஎஸ், பிஎஸ்சி
லெப்டினன்ட் ஜெனரல்,
தரைப்படைத் தளபதி.

தரைப்படைத் தலைமையகம்,
த. பெ. 553,
கொழும்பு,
2006.04.05.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கைத் தரைப்படை**

பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கான விண்ணப்பம்

1. (அ) முதற் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :----.
(ஆ) பிற பெயர்கள் :----.
(இ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. (அ) முகவரி :----.
(ஆ) தேர்தல் மாவட்டமும் அதன் இலக்கமும் :----.
(இ) கிராமசேவை உத்தியோகத்தரின் பிரிவு :----.

3. தேசிய இனம் (பரம்பரை இலங்கைப் பிரசையா அல்லது பதிவுமூலம் இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடவும். பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடவும்) :----.

4. (அ) பிறந்த திகதி :----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்.) சமய தீட்சை சான்றிதழ் அல்லது கல்விப் பிரமாண தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது).

(ஆ) 2006.05.31 ஆந் திகதியன்று வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

(இ) உயரம் :----.

5. அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையம் :----.

6. தந்தையின் பெயரும் பிறப்பின்போது தேசிய இனமும் :----. (குடியுரிமை வழங்கப்பட்டவரானால் சான்றிதழின் இலக்கமும் திகதியும் குறிப்பிடல் வேண்டும்.)

7. தாயின் பெயரும் பிறப்பின்போது தேசிய இனமும் :----.

8. நீர் பயின்ற பாடசாலையின் பின்வரும் விபரங்களைக் குறிப்பிடவும் :----.

| பாடசாலையின் பெயர் | சேர்ந்த திகதி | விலகிய திகதி | கடைசியாக தோன்றிய பொதுப் பரீட்சைகள் |
|---|---|---|---|
| | | | |

9. கல்வித் தகைமைகள் :- (ஒவ்வொரு பரீட்சைகளையும் வெவ்வேறாக குறிப்பிடவும்).

| பரீட்சையும் அதன் இலக்கமும் | வருடம் | சித்திபெற்ற பாடங்கள் | பெறுபேற்றுத் தரம் |
|---|---|---|---|
| | | | |

10. பாடசாலையில் நீர் பெற்ற மேன்மையான விளையாட்டுச் சிறப்புகள் :----.

11. பாடசாலையில் உமக்கு புகழ் தேடிக்கொடுத்த ஏனைய அரும்பெரும் செயல்கள் :----.

12. இலங்கை சுயேச்சைப் படை, இலங்கை சாரணர் படை, பயிலிளவற் சிறப்பணி ஆகிய சுயேச்சை நிறுவனங்களில் சேவை செய்திருப்பின் அவற்றின் விபரம் :----.

13. இதற்கு முன்னர் படைக்கலந்தாங்கிய படைத்துறைகள் சேவைகளுக்கு விண்ணப்பம் செய்திருப்பின் அவற்றின் விபரம் :----.

14. பாடசாலையை விட்டு விலகிய பின்னர் செய்த தொழில் :----.

15. ஓர் அரசாங்க திணைக்களத்தில் அல்லது அரசாங்கத்துறை சபை/கூட்டுத்தாபனம் (மத்திய வங்கி, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள், வர்த்தக வங்கிகள், பல்கலைக்கழகங்கள், அரசாங்கத்தால் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுப்பங்குத் தொகுதி கம்பனிகள் உட்பட) பணிக்கமர்த்தப்பட்டிருப்பின் அவற்றிலிருந்து விலக்கப்பட்ட காரணம் :----.

16. நற்சான்றிதழ்களை வழங்கியவர்களின் பெயரும் முகவரியும் :

(அ) :----.
(ஆ) :----.

17. வேறு பொருத்தமான விடயங்கள் :----.

18. மேலே தரப்பட்ட வினாக்களுக்கு என்னால் கொடுக்கப்பட்ட விடைகள் அனைத்தும் எனது நம்பிக்கைக்கும் அறிவுக்கும் எட்டியவரை சரியானவை என்று உறுதிப்படுத்துகின்றேன். தரைப்படைப் பயிற்சிக்கான எல்லாச் சேவை நிபந்தனைகளையும் வாசித்து அறிந்துகொண்டேன். அத்துடன் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இவ்வுத்தியோகத்தர்களுக்கான சம்பளம் வாய்ப்புகள், சேவை நிபந்தனைகள் அனைத்தையும் அறிந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

4-338

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**அளவையியலிலும் படமாக்கலிலும் நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான வருடாந்த பரீட்சை - 2006**

நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான நில அளவையும் மட்டமாக்கலும் சம்பந்தமான வருடாந்தப் பரீட்சை எழுத்து, செய்முறை ஆகிய இரு பகுதிகளிலும் நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சை 2006 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17 ஆந் திகதியும் செய்முறைப் பரீட்சை 2006 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 15 ஆந் திகதியும் ஆரம்பமாகும். எழுத்துப்பரீட்சையில் சித்தியெய்திய அல்லது விலக்கு அளிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் மட்டும் செய்முறைப் பரீட்சைக்கு அனுமதியளிக்கப்படுவர்.

2. எழுத்துப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். செய்முறைப் பரீட்சை தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் அல்லது கொழும்பில் நடாத்தப்படும்.

2002.10.04 ஆந் திகதி இடப்பட்ட 17 ஆம் இலக்க நில அளவை கட்டளைச் சட்டத்திலுள்ள பந்தி 25(2) (b) (iv) இன்படி இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் ஆகக்குறைந்தது ஒரு தடவையாவது இப்பரீட்சைக்கு தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மட்டும் இப்பரீட்சைக்கு தோற்ற அனுமதி வழங்கப்படும். புதிய பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்கு தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இப்பரீட்சை 2007 ஆம் ஆண்டிற்கு பிற நில அளவையாளர் நாயகத்தினால் நடாத்தப்படமாட்டாது.

3 (அ) இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு கொழும்பு 5, நில அளவையாளர் நாயகத்தின் காரியாலயத்திலுள்ள தலைமை பிரிவில் அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் உள்ள பரீட்சைக் கிளையில் இருந்து பெறப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தைப் பூர்த்தி செய்து பதிவுத்தபாலில் "நில அளவை அத்தியட்சகர், பரீட்சைக் கிளை, அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை" என முகவரியிட்ட தபால் உறையில் 2006 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுப் பத்திரம் வழங்குவதற்கான வருடாந்தப் பரீட்சை - 2006" என குறிப்பிடப்படுதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :-

(i) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திரம் (ஆங்கிலம்) அல்லது கணிதம், ஆங்கில மொழி, சிங்களம்/தமிழ் மொழியுடன் வேறு மூன்று பாடங்களுடன் கூடிய கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பத்திரம், இவ்வாறு பாடங்களும் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது வேறு ஏதேனும் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் அல்லது முறையாக உத்தரவுப்பத்திரம் பெற்ற நில அளவையாளர் அல்லது மட்டமிடுபவர் அல்லது அளவையாளர் மட்டமிடுபவரின் கீழ் குறைந்தது ஒரு வருடமாவது அளவையியலையும் மட்டமாக்கலையும்/ அளவையியலை/ மட்டமாக்கலை கற்றதாக காட்டும் சான்றிதழ்.

**குறிப்பு**.- சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் பின்னர் சமர்ப்பிக்க வேண்டி வரும்.

4. பரீட்சார்த்திகள் விண்ணப்பம் ஏற்கும் முடிவுத் திகதிக்கு முன்பு அதாவது 2006 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25 ஆந் திகதிக்கு முன்பதாக கீழ்க்காணும் பரீட்சைக் கட்டணங்களை நில அளவையாளர் நாயகத்திடம் செலுத்துதல் வேண்டும் :-

| | |
|---|---|
| (i) *எழுத்துப் பரீட்சை :-* | *ரூபா ச.* |
| அனுமதிக் கட்டணம் | 75.00 |
| ஆங்கில மொழி, எண்கணிதமும் அட்சர கணிதமும் கேத்திர கணிதமும் திரிகோண கணிதமும் | 150.00 |
| அளவையியல் | 75.00 |
| மட்டமாக்கல் | 75.00 |
| (ii) *செய்முறைப் பரீட்சை:* | *ரூபா ச.* |
| அனுமதிக் கட்டணம் | 75.00 |
| அளவையியல் | 525.00 |
| மட்டமாக்கல் | 525.00 |

கொடுப்பனவுகள் பணம் மூலம் "கொழும்பு 5, நில அளவையாளர் நாயகத்தின் காரியாலயத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்திலோ அல்லது பணிப்பாளர், அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை" என்னும் பெயருக்கு எடுக்கப் பட்ட காசுக்கட்டளை மூலமோ செலுத்தலாம். பணம் கொடுப்பனவு செய்யும் தபால் காரியாலயம் தியத்தலாவையாக இருத்தல் வேண்டும்.

நில அளவை படமாக்கல் நிறுவனத்தில் அல்லது நில அளவை யாளர் அதிபதியின் காரியாலயத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டி ருந்தால் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியையும் காசுக்கட்டளை மூலம் செலுத்தப்பட்டிருந்தால் காசுக்கட்டளையின் மூலப் பிரதியையும் இணைக்கவும். (பற்றுச்சீட்டையோ காசுக்கட்டளையையோ தயவு செய்து விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டாம்.)

முத்திரை, காசோலை மூலம் கொடுப்பனவு செய்தல் ஏற்கப்பட மாட்டாது,

**குறிப்பு**.- இதுவரை செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதி இல்லாதவர்கள் இந்த வருடத்திற்கான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னரும் செய்முறைப் பரீட்சைத் திகதிக்கு முன்னரும் மேலே பந்தி 4 (ii) இன்படி தேவையான கட்டணத்தைச் செலுத்தலாம். (கீழேயுள்ள 8 ஆம் பந்தியைப் பார்க்கவும்)

5. எழுத்துப் பரீட்சைக்கான பாடங்கள் பின்வருமாறு :-

(i) *ஆங்கிலம்*- ஒரு வினாத்தாள் : பரீட்சார்த்தியின் ஆங்கில அறிவையும் ஆதிக்கத்தையும் பரீட்சிப்ப தற்காக கட்டுரைகளிலும் வினாக்களிலும் பயிற்சி.

(ii) *எண்கணிதமும் அட்சர கணிதமும்* - ஒரு வினாத்தாள்

*எண்கணிதம்*.- முழு இலக்கங்களுக்கும் பொதுப் பின்னங்களுக்கும் தசம பின்னங்களுக்கும் பாவிக் கப்படும் எண்கணிதத்தின் தத்துவங்களும் செய்முறையும் மீற்றர் அளவை முறை குறிப்பிடப் பட்ட திருத்தத்தின் அளவுக்குக் கிட்டத்தட்ட சரியாக்கல். தசங்களினதும் விகிதங்கள், விகித சமன்களினதும் பெருக்கல், பிரித்தல், சுருக்கு முறைகள், நூற்று வீதம் சராசரிகள், எண்கணி தத்தின் செய்முறைப்பிரயோகம்.

*அட்சரகணிதம்*.- எண்கணித அட்சரகணித விதிகளது பொது முடிவுகளின் குறியீட்டுக் கோவையும் அவற்றின் பிரயோகமும், எளிய ஈருறுப்பு இருபடிக்கோவைகளின் காரணிகள் (மூலக் கூறுகள்) முதற்படி அல்லது இரண்டாம்படிச் சமன் பாடுகள் அவற்றுக்கு வழிகாட்டும் பிரச்சினைகளும் வர்க்கமூலம், எளிய விகிதமுறு கின்ற முழுவெண்களுக்குரிய அட்சரகணித செயற் கூறுகளைக் காட்டும் வரைபுகள், கூட்டல் விருத்தியும் இசையிடை விருத்தியும், பெருக்கல் விருத்தி சுட்டிகளினதும் மடக்கை களினதும் அறிமுறையும் மடக்கை வாய்ப்பாட்டுப் பயன் பாடும் ஒரு நேரான முழு எண்ணுக்குரிய சுட்டியின் ஈருறுப்பு அறிமுறை.

(iii) *கேத்திரகணிதமும் திரிகோண கணிதமும்*.- ஒரு வினாத்தாள்

கேத்திரகணிதம்.- ஒப்பிடத்தக்க நீளம் கொடுக்கப் பட்டுள்ள அடித்தளங்களையும் குத்துயரங் களையும் கொண்ட ஊக்கிளிட் (Euclid) I- IV இன் பாடங்கள் கேத்திர கணிதத் தோற்றங்களுக்குரிய எல்லா நிறுவல்களும் கேத்திர கணிதச் சார்பானதாயிருக்க வேண்டும்.

(ஊக்கிளிட்டு டைய நிறுவல்கள் வற்புறுத்தப்படமாட்டா.) இயல்பொத்த உருவங்கள் வட்டத்தின் அளவியல் கனம், நீளசதுரக்கண்டம் நான்முகி, கோளம், உருளை, ஆப்பு, கூம்பு எனப்படும் எளிய திண்ம பொருள்களின் அளவியல்.

திரிகோணகணிதம்.- முக்கோணிகளின் தீர்வும் அதுவரையுள்ள தகுதியும் (முக்கோணிகளின் செய்முறைத் தீர்வுகளையும் அவற்றின் பிரயோகங்களையும் சேர்த்து) மடக்கை வாய்ப்பாட்டினதும் பிறவாய்ப்பாடுகளினதும் பிரயோகத்தை உள்ளடக்கும் எண்ணுதார ணங்கள்.

(iv) *அளவையியல்* - ஒரு வினாத்தாள்

சங்கிலி அளவை டிரான்சிற் தியோடலைற்றுகளும் கிறேடில் தியோடலையற்றுகளும் அவற்றின் பிரயோகமும். அவற்றைச் சீர்படுத்தும் முறை களும், தள செங்கோண ஆள்கூறுகளின் பாவனை உட்பட தியோடலைற், திசையறி கருவிப் போகுகள், வளைகோட்டு வீச்சீடு தக்கியோமானி முறைகள், தள மேசை அளவை, தளமுக்கோண வாக்கம், வானியல் நோக்கல்களினால் திசை கோளைக் கணித்தல்.

(v) *மட்டமாக்கவியல்.*- ஒரு வினாத்தாள்

டம்பி 'Y', மற்றும் குக்கின் திருப்பு மட்டமும் அவற்றின் பிரயோகமும் அவற்றைச் சீர்படுத்தும் முறை களும். மட்டமாக்கலின் அறிமுறையும் செய்முறை யும் மண்வேலையைக் கணித்தல் புகையிரதப் பாதை அளவைகளும் வீதி அளவைகளும் அவற்றைத் தரையில் குறித்தலும் நீர் விநியோகத்திற்கான அளவைகள் உருவரைகளும் அவற்றிலிருந்து அவற்றால் அடக்கப் பட்ட பகுதிகளைக் கணிப்புச் செய்தலும்.

மேலே உள்ள பாடங்கள் (ii)-(v) வரை வினாத்தாள்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்படுவதால் பரீட்சார்த்திகள் தாங்கள் விரும்பிய ஏதாவது ஒரு மொழியில் விடையளிக்கலாம்.

6. இந்த எழுத்துப் பரீட்சையின் கேள்வித்தாள்கள் (I), (II), மற்றும் (III)ற்கான தேர்ச்சி புள்ளி ஒவ்வொரு தாளுக்கும் 40 வீதமும் சராசரிப்புள்ளியாக 50 வீதமும் கேள்வித்தாள்கள் (IV) மற்றும் (V) ற்கு 60 வீதமுமாகும்.

7. அளவையியல் பரீட்சைக்கு மாத்திரம் தோற்றும் பரீட்சார்த்திகள் (I) தொடக்கம் (IV) வரையுள்ள பாடங்களில் சித்தியெய்தல் வேண்டும். மட்டமாக்கவியல் பரீட்சைக்கு மாத்திரம் தோற்றும் பரீட்சார்த்திகள் (I) தொடக்கம் (III) வரையுள்ள பாடங்களிலும் (V) லும் சித்தியெய்தல் வேண்டும். அளவையியல் மட்டமாக்கவியல் ஆகிய இரு பரீட்சைக்கும் தோற்றும் பரீட்சாத்திகள் (I) தொடக்கம் (V) வரையுள்ள பாடங்களிலும் சித்தியெய்தல் வேண்டும்.

8. எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்திய பரீட்சார்த்திகளுக்கு செய்முறைப்பரீட்சைக்கான திகதி, நேரம், இடம் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப்பரீட்சை எழுத்துப் பரீட்சையின் அளவையியல் மட்டமாக்கவியலினதும் பாடத்திட்டத்திற்கமைய நடைபெறும். செய்முறைப் பரீட்சையில் சித்தியெய்துவதற்கு பரீட்சார்த்திகள் தங்களுக்கு கொடுக்கப்படும் செய்முறை வேலையை தொடர்ந்து முழுமையாகச் செய்து பரீட்சையாளர்களின் முழுத்திருப்தியைப் பெறவேண்டும்.

9. செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் கொடுக்கப்பட்ட நேர அட்டவணையின்படி கட்டாயமாக தோற்றுதல் வேண்டும். எந்த ஒரு காரணம் கொண்டும் நேர அட்டவணையானது மாற்றப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் பரீட்சகர் குறிக்கும் நேரத்திற்குள் வெளிக்கள வேலைகளை செய்வதோடு சீரான நிலையிலுள்ள உபகரணங்களையும் கொண்டு வருதல் வேண்டும். திருப்தியற்ற வேலைகட்கு சீரற்ற உபகரணங்களை ஒரு காரணமாக காட்டுதல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பரீட்சை நேரத்தில் எவருடனாவது தொடர்பு கொள்ளக் காணப்படும் பரீட்சார்த்திகளின் தகமை நீக்கப்படும்.

10. எல்லா பரீட்சார்த்திகளும் தங்கள் சொந்த உபகரணங்கள், தூக்குக்குண்டு, கம்பங்கள், முளைகள், வரைதற் பலகைகள், வரைதற் பொருட்கள், எழுது கருவி வகை ஆகியவற்றையும் தொழிலாளர் களையும் கொண்டுவருதல் வேண்டும். எழுத்துப் பரீட்சைக்கோ அல்லது செய்முறைப் பரீட்சைக்கோ எவ்விதத்திலும் உதவி அளிக்கப்படமாட்டாது.

11. 2006 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 25 ஆந் திகதிக்கு பின்பு கிடைக்கும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. சகல பரீட்சார்த்திகளும் மேற்பார்வையாளர் திருப்திப்படுமாறு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக கீழே கொடுக்கப்படும் ஏதாவது ஒரு சாதனம் அங்கீகரிக்கப்படும் :-

(அ) ஆட்பதிவாளரால் வழங்கப்படும் தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச் சீட்டு (பாஸ்போட்) ;
(இ) இப்பரீட்சை நிகழும் மூன்று வருடத்திற்குள் ஒர் அரசாங்க பகுதியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும் அதற்குரியவரது புகைப்படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு அத்தாட்சிப்பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாசனம்.

13. மேற்கூறப்பட்ட எந்தவொரு சாசனமூலமாவது தமது அடையாளத்தை நிரூபிக்கத் தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் பரீட்சிக்கப்படமாட்டார்.

14. எக்காரணம் கொண்டும் கட்டுப்பணம் திருப்பிக் கொடுக் கப்படவோ அல்லது அடுத்த பரீட்சைக்கு பாவிக்கப்படுவதற்கோ அனுமதிக்கப்படமாட்டாது.

15. இது சம்பந்தமான சகல தொடர்புகளும் "நில அளவை அத்தியட்சகர், பரீட்சைக் கிளை, அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவை" என முகவரியிடப்பட வேண்டுமேயன்றி எனக்குத் தனிப்பட்ட முறையில் அல்ல.

பீ. ஜே. பீ. மெண்டிஸ்,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
த. பெ. 506,
கிருல வீதி,
கொழும்பு 5.
2006. 03. 02

4-241

## கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

### நிலஅளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2006

நிலஅளவையாளர் நாயகத்தால் உத்தரவுபெற்ற படவரைஞராக தொழில் புரிவதற்கான சான்றிதழ் வழங்குவதற்கான பரீட்சை கொழும்பில் நடைபெறும். பரீட்சை இரண்டு பகுதிகளாக நடைபெறும்.

பகுதி I - ஆள் கூற்றுக் கணிப்பு
பகுதி II - படம் வரைதல்

2. முதலாவது பகுதிப் பரீட்சை 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதியும், இரண்டாவது பகுதி பரீட்சை 2006 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 9ஆந் , 10 ஆந் திகதிகளிலும் நடைபெறும். முதற் பரீட்சையில் சித்தியடையாத பரீட்சார்த்திகள் இரண்டாவது பரீட்சைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். சான்றிதழ் வழங்குவதற்கான தகுதியைப் பெறுவதற்கு பரீட்சார்த்திகள் ஒரே தடவையில் பகுதி I, பகுதி II ஆகிய இரு பரீட்சைகளிலும் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

3. பரீட்சார்த்திகள் பின்வருவனவற்றைச் செய்ய முடியுமென்பதில் என்னைத் திருப்திப்படுத்த வேண்டும் :-

(அ) புலக் குறிப்பிலிருந்து ஆள் கூற்றுத் தாள் ஒன்று தயார் செய்து அளவைப் போகு ஒன்றின் ஆள் கூற்றைக் கணித்தல்.

(ஆ) புலக் குறிப்பிலிருந்து ஒரு படத்தை பாகை மானி மூலமாகவும் ஆள் கூறு மூலமாகவும் சரியாகக் குறித்து பரப்பளவுகளைச் சரியாகக் கணித்தல்.

4. பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கீழ்த்தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரித்து ரூபா 300 கட்டணத்துடன் பதிவுத்தபால்மூலம் "நில அளவை அத்தியட்சகர் (பரீட்சை), அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை" என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். கட்டணம் முத்திரைகளாகவோ காசோலைகளாகவோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. காசுக் கட்டளைகள் "பணிப்பாளர், அளவையியல் படமாக்கல் நிறுவனம், தியத்தலாவை" என்னும் பெயரில் எடுக்கப்படல் வேண்டும். கட்டணம் பணம் மூலம் செலுத்துவதானால் தியத்தலாவை, அளவையியல் படமாக்கல் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டும். மூலப் பற்றுச்சீட்டு அல்லது மூலக் காசுக் கட்டளையை இணைக்கவும். (அவற்றை ஒட்ட வேண்டாம்.) தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுபெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2006" என எழுதப்பட வேண்டும்.

5. எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப் படமாட்டாது.

6. 2006 ஆம் ஆண்டு ஆனி மாதம் 05 ஆந் திகதிக்குப் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7. வரைபுத்தாள்களும் ஆள் கூற்றுத்தாள்களும் பரீட்சை மண்டபத்தில் வழங்கப்படும். இருந்தும் வரைதல் உபகரணங்கள் ஆள் கூற்றுக் கணிக்கும் கணிதவாய்ப்பாடுகள் மற்றும் அவர்களுக்கு வேண்டிய உபகரணங்கள் யாவும் அவர்களே கொண்டு வருதல் வேண்டும். பரீட்சை மண்டப மேற்பார்வையாளரின் அனுமதியுடன் சாதாரண கணிப் பொறிகள் (Non Programmable Scientific Calculators) பாவிக்க அனுமதிக்கப்படும்.

8 (i) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் அவரை ஒவ்வொரு பாடத்திலும் பரீட்சிப்பதற்கு முன்பு, மேற்பார்வையாளரைத் திருப்திப்படுத்துமாறு தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். கீழ்க் கண்ட ஏதாவது ஒரு ஆவணத்தைச் சமர்ப்பித்தல் மூலம் அதை நிரூபிக்கலாம் :-

(அ) ஆள்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை ;
(ஆ) ஒரு செல்லுபடியான கடவுச் சீட்டு ;
(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்துடன் பரீட்சார்த்திக்கு மூன்று வருடங்களுக்குள் வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் நிழற்படத்தை கொண்டதுமான ஏதாவதொரு சான்றிதழ் அல்லது உத்தரவுச்சீட்டு.

(ii) பந்தி 8 (i) இல் வேண்டப்பட்ட அடையாளத்தை நிரூபிக்க இயலாத எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சிக்கப்படமாட்டார்.

9. இப்பரீட்சை மெற்றிக் முறையில் நடாத்தப்படும்.

பீ. ஜே. பீ. மெண்டிஸ்,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,
த. பெ. இல. 506,
கிருல வீதி,
கொழும்பு 5,
2006.03.01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நில அளவைத் திணைக்களம்**

*நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவு பெற்ற படவரைஞர் சான்றிதழ் வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சை - 2006*

சுட்டிலக்கம் :
(அலுவலக பாவனைக்கு)

(அ) (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : (திரு./திருமதி/செல்வி) :-----.
(ii) முதலெழுத்தைக் குறிக்கும் பெயர் :-----.
(iii) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில்) : Mr./Mrs./ Miss :-----.
(ஆ) பால் :-----.
(இ) பதவி :-----.
(ஈ) தொழில் பார்க்குமிட முகவரி :-----.
(உ) நிரந்தர முகவரி :-----.
(ஊ) பிறந்த திகதி :-----.
(எ) சித்தியடைந்த உயர் பரீட்சையும் மொழியும் :-----.
(ஏ) பரீட்சார்த்தி இப்பரீட்சைக்கு தோற்ற உத்தேசித்திருக்கும் மொழி (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) :-----.
(ஐ) செலுத்திய கட்டணம் ரூபா :-----.

(ஓ) காசுக் கட்டளை இலக்கம் / பற்றுச்சீட்டிலக்கம் :-----.
வழங்கிய அலுவலகம் :-----.
திகதி :-----.

(தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் செலுத்தப்பட்டிருப்பின் பற்றுச் சீட்டின் மூலப் பிரதியை அல்லது காசுக் கட்டளை மூலம் செலுத்தப்பட்டிருப்பின் அதன் மூலப் பிரதியை இணைக்கவும்).

மேற்கூறிய விபரங்கள் யாவும் சரியானதென்றும் மற்றும் உண்மையானதென்றும் உறுதிமொழிகின்றேன்.

-----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----

4-242